பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4ங

24 04 2025 **THURSDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. பஹல்காம் தீவிரவாத தாக்குதலை அடுத்து, பாதுகாப்பு நிலைமை குறித்து ஆய்வு செய்ய ராணுவ தலைமைத் தளபதி ஜென்ரல் உபேந்திர திவேதி நாளை ஜம்மு காஷ்மீர் செல்கிறார்.

2. தாக்குதலில் ஈடுபட்ட லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் பற்றிய தகவல் அளிப்போருக்கு 60 லட்சம் ரூபாய் வெகுமதி வழங்கப்படும் என்று ஜம்மு காஷ்மீர் காவல்துறை அறிவித்துள்ளது.

3. நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதில் உயிரி தொழில்நுட்பத்தின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. இலங்கையில் கடந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி திட்டமிட்ட இலக்கை அடைந்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது..

5. ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Abhijeet** உட்பட ஐந்து பேர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<

ராணுவ தலைமைத் தளபதி ஜென்ரல் உபேந்திர திவேதி, நாளை ஜம்மு காஷ்மீரின் ஸ்ரீநகர் செல்கிறார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலால் எழுந்துள்ள சூழல் குறித்து அவர் அங்கு சென்று ஆய்வு மேற்கொள்ளவிருப்பதாகவும், பாதுகாப்பு நிலைமை குறித்து ராணுவத்தினருடன் ஆலோசனை நடத்தவிருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

காஷ்மீர் பள்ளத்தாக்கு மற்றும் எல்லைக் கட்டுப்பாடு கோட்டுப் பகுதிகளில் தீவிரவாதிகளுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் எடுத்து வரும் நடவடிக்கைகளை பணியில் உள்ள ராணுவ கமாண்டர்கள் தலைமைத் தளபதியிடம் எடுத்துரைப்பார்கள் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

இதனிடையே, தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக மத்தியஅரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

நாடாளுமன்ற வளாகத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்று வரும் இந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு. ஜெய்சங்கர், திருமதி, நிர்மலா சீதாராமன், திரு. கிரண் ரிஜிஜு, பிஜேபி தலைவர் திரு. ஜெபி. நட்டா, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

திமுக சார்பில் திரு. திருச்சி சிவா, தேசியவாத காங்கிரஸ் தலைவர் திரு. பிரபுல் பட்டேல், சமாஜ்வாதியின் திரு. ராம்கோபால் யாதவ், ஆம் ஆத்மி கட்சி சார்பில் திரு. சஞ்சய் சிங் உள்ளிட்டோரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா தலைமையில் ஸ்ரீநகரிலும் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

இதனிடையே, பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட லஸ்கர்-இ-தொய்பா துணை அமைப்பைச் சேர்ந்த 3 தீவிரவாதிகள் பற்றிய தகவல் அளிப்போருக்கு தலா 20 லட்சம் வெகுமதி வழங்கப்படும் என்று ஜம்மு காஷ்மீர் காவல்துறை அறிவித்துள்ளது

>>>>>><<<<<

பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸ் அருகே அட்டாரி-யில் இந்திய-பாகிஸ்தான் ராணுவத்தினரின் வழக்கமான அணிவகுப்பு நடைமுறை, எல்லை மூடப்பட்டதால் நிறுத்தப்பட்டது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து, மத்திய அரசு எடுத்த முடிவை அமல்படுத்தும் வகையில் இரு நாட்டு ராணுவத்தினரும் கூட்டாக பங்கேற்கும் நிகழ்ச்சி நடைபெறவில்லை.

அதேபோல் சூரிய அஸ்தமனத்தின் போது இந்திய கொடி இறக்கப்பட்ட பின்னர், இரு நாட்டு ராணுவத்தினர் கைகுலுக்கும் நிகழ்வும் நடைபெறவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போது, அவர் இந்த கண்டனத்தை பதிவு செய்ததாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட சமூகவலைதளப் பதிவில் தெரிவித்துள்ளது.

இந்த தருணத்தில் இந்திய மக்களுக்கும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் தமது ஆறுதலை இஸ்ரேல் பிரதமர் தெரிவித்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த உரையாடலின் போது, எல்லை தாண்டிய பயங்கரவாத தாக்குதலின் தன்மை குறித்து பிரதமர் தமது கருத்துக்களை, இஸ்ரேல் பிரதமருடன் பகிர்ந்து கொண்டார்.

மேலும் தாக்குதலுக்கு காரணமானவர்கள் மற்றும் அவர்களை ஆதரிப்பவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்ற இந்தியாவின் உறுதிப்பாட்டையும் பிரதமர் தெரிவித்ததாக அந்தப் பதிவில் மேலும் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, குஜராத் மாநிலத்தின் **Idar, Vadali** நகரங்களில் இன்று முழுஅடைப்பு நடைபெற்றது.

அந்த நகரங்களில் திரண்ட மக்கள், தீவிரவாதத்திற்கு எதிராகவும், இந்த தாக்குதலின் பின்னணியில் தொடர்புடையவர்களுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முழக்கங்களை எழுப்பினர்.

கடைகள் உள்ளிட்ட அனைத்து வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன.

வன்முறைக்கு எதிராக தேசிய அளவிலான ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் இந்த கடையடைப்பு நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<

பாகிஸ்தான் நடிகர் **Fawad Khan** நடித்துள்ள **Abir Gulaal** திரைப்படத்தை இந்தியாவில் திரையிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலால் நாடுமுழுவதும் மக்களிடையே எழுந்துள்ள அதிருப்தியை தொடர்ந்து மத்திய அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த திரைப்படம் அடுத்த மாதம் 9ஆம் தேதி வெளியாகவிருந்தது.

>>>>>><<<<<

நாட்டின் எதிர்கால பொருளாதாரத்தை நிர்ணயிப்பதில் உயிரி தொழில்நுட்பத்தின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

வேலூர் சிஎம்சி மருத்துவமனையில் ஹிமோபீலியா சிகிச்சை குறித்து ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் விஞ்ஞானப்பூர்வ பயணத்தில் இந்த மருத்துவமனையில் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக திகழ்கிறது என்று கூறினார்.

பொதுசுகாதார கட்டமைப்பை உருவாக்குவதிலும், உயிரி தொழில்நுட்பத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது என்று அவர் தெரிவித்தார்.

இது, சாதாரண அறிவியல் மட்டுமல்ல, தேசத்தை கட்டமைப்பதில் உயிரி தொழில்நுட்பம் முக்கியமானதாக விளங்குகிறது என்றும், இந்த துறையின் சமீபத்திய வெற்றி அதற்கு சாட்சியாகும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>>><<<<<

கோத்ரா ரயில் எரிப்பு வழக்கின் குற்றவாளிகளும், குஜராத் அரசும் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் மீதான இறுதி விசாரணை அடுத்த மாதம் 6 மற்றும் 7-ஆம் தேதிகளில் நடைபெறும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீதிபதிகள் திரு. மகேஸ்வரி, திரு. ராஜேஷ் பிண்டால் ஆகியோர் அடங்கிய அமர்வு, அந்த மனுக்களை விசாரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 3ஆம் தேதிக்குள் திருத்தப்பட்ட மனுவை தாக்கல் செய்யுமாறு குற்றவாளி ஒருவர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சஞ்சய் ஹெக்டேவை நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

>>>>>><<<<<

சிக்கிம் மாநில காவல்துறை பணி ஒதுக்கீட்டில் அக்னிவீர் படைப்பிரிவினருக்கு 20 சதவீத ஒதுக்கீடு வழங்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங், காங்டாக்கில் இதனை தெரிவித்தார்.

சிக்கிம் காவல்படையின் பல்வேறு நிலையிலான பணிகளில் முன்னாள் ராணுவத்தினருக்கு வயது வரம்பில் 10 ஆண்டுகள் தளர்வு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வர்த்தக பணிகளில் முன்னாள் ராணுவத்தினர் ஈடுபட விரும்பினால் அவர்களுக்கு அரசு கடைகள் ஒதுக்கீடு செய்யும் என்றும் திரு. பிரேம்சிங் தமாங் தெரிவித்தார்.

**>>>>>><<<<<**

கடந்த ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி குறித்து உலக வங்கி பாராட்டு தெரிவித்துள்ளது.

அந்நாட்டின் தொழில் மற்றும் சுற்றுலாதுறையின் வலுவான செயல்பாடுகளால், வளர்ச்சி விகிதம் 5 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்ததாக உலக வங்கி தெரிவித்திருப்பதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

பொருளாதாரத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட வலுவான சீர்திருத்தங்களால், அந்நாட்டின் வளர்ச்சி ஸ்திரமான நிலையை எட்டியுள்ளதாக உலக வங்கி தெரிவித்திருப்பதை அந்நாட்டு அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

நடப்பாண்டில் இலங்கையின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 3 புள்ளி ஐந்து சதவீதம் என்ற அளவிலேயே நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<**

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Abhijeet** உட்பட ஐந்து பேர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Abhijeet,** கஜகஸ்தானின் **Mukhmmed Burkhanov** –வை வென்றார்.

இதர காலிறுதி ஆட்டங்களில் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் **Nelson Khwairakpan** சீன தைபேயின் **Wang Sheng Yang** –ஐயும், 64 கிலோ எடைப்பிரிவில் **Lakshy Phogat** ஜோர்டானின் **Laith Ajailat-** ஐயும் வென்றனர்.

மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில், 52 கிலோ எடைப்பிரிவில் **Princi** யுக்ரைனின் **Yeva Kuvanova** -வையும், 55 கிலோ எடைப்பிரிவில் **Samruddhi Satish Shinde,** யுக்ரைனின் **Kseniia Savana-**வையும் வென்றனர்.

**>>>>>><<<<<**

ஃபெடரேசன் கோப்பைக்கான தேசிய தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் பிரவீன் சித்ரவேல் தங்கப்பதக்கம் வென்றார்.

கொச்சியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ட்ரிபிள் ஜம்ப் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>>><<<<<**

**Gwangju** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சீனாவின் **Wang Aoran** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<**

**Nenorca** ஓப்பன் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Nihal Saran** முதலிடத்தில் உள்ளார்.

**>>>>>><<<<<**